ESTD : 1947

விருதுநகர் இந்து நாடார்கள் செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி),
தேசிய தர மறுமதிப்பீட்டின் கீழ் 'ஏ' அந்தஸ்து தகுதி பெற்றது
குறைந்த கட்டணத்தில் உயர்தரக் கல்வி விருதுநகர்.

* * * * *

29.03.2022

சுற்றறிக்கை

நமது கல்லூரிக்கு மோட்டார் சைக்கிளில் வரும் மாணவ/மாணவியர்கள் கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

1. மோட்டார் சைக்கிளில் வரும் மாணவ/மாணவியர்கள் கண்டிப்பாக தலைக்கவசம் அணிந்து வர வேண்டும்.
2. மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேல் கண்டிப்பாக எப்பொழுதும் செல்லக்கூடாது என்று மீண்டும் அறிவுறுத்தப்படுகின்றது.
3. மோட்டார் சைக்கிளில் செல்லும்பொழுது குறைவான வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டுமென தெரிவிக்கப்படுகின்றது.
4. மாணவ/மாணவியர்கள் தங்களுடைய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் கல்லூரிக்கு மோட்டார் சைக்கிளில் வருவதற்கு அனுமதி கிடையாது.
5. மாணவர்கள் மோட்டார் சைக்கிளை மாலை கல்லூரி முடிந்த பின்பு 3.30 மணிக்கு மேல் தான் வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
6. மாணவர்கள் தங்களது இரு சக்கர வாகனத்தை அதற்கென ஒதுக்கப்பட்ட மாணவர்கள் வாகன நிறுத்தத்தில் மட்டுமே நிறுத்த வேண்டும். கல்லூரி வளாகத்திற்குள் வேறு எங்கும் மற்றும் கல்லூரிக்கு வெளியேயும் கண்டிப்பாக நிறுத்தக் கூடாது.
7. அருப்புக்கோட்டை சாலை நுழைவு வாயில் வழியாக இரு சக்கர வாகனத்தில் வர மாணவ, மாணவியர்களுக்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது. இரு சக்கர வாகனத்தில் வரும் மாணவ, மாணவியர்கள் பிரதான நுழைவு வாயிலை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

மீறினால் கல்லூரியிலிருந்து நீக்கப்படுவார்கள் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரி முதல்வர்

பெறுநர்

துறைத் தலைவர் மூலமாக மாணவ/மாணவியர்கள் வகுப்பறைச் சுற்றுக்கு &
துறை அறிவிப்புப் பலகைக்கு.